செ.வெ.எண் 40 **பத்திரிகை செய்தி** நாள் 11-01-2010

நடப்பு கரீப் கொள்முதல் பருவத்தில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ், சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1000/- என்றும், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1050/- என்றும் அரசு நிர்ணயம் செய்திருந்தது.

நெல் உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளை மேலும் ஊக்கப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாடு அரசு கூடுதல் ஊக்கத் தொகை வழங்குவதற்கு முடிவு செய்து அதன்படியே குவிண்டால் ஒன்றுக்கு ரூ.50/- கூடுதல் ஊக்கத் தொகை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி, தற்பொழுது சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1050/– என்றும், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.1100/– என்றும் கூடுதலாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப கழகத்தால் நெல் கொள்முதல் செய்யப்படும் அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் மேற்கூறப்பட்ட கூடுதல் ஊக்கத் தொகையுடன் கூடிய விலை அடிப்படையில் நெல் கொள்முதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விவசாயிகள் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழக நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை விற்பனை செய்து உடனுக்குடன் அதற்கான தொகையை ரொக்கமாகப் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11.1.10

நிர்வாக இயக்குநர்,
தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9